**பத்திரிக்கைச் செய்தி**

**ஆனைக் கொம்பன் ஈ தாக்குதலைக் கட்டுப்படுத்திட**

**வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை**

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் சம்பா நெற்பயிரினை தாக்கும் ஆனைக்கொம்பன் ஈயினை கட்டுப்படுத்திட வேளாண்மை இணை இயக்குநர், திருமதி. மு. சங்கரலட்சுமி அவர்கள் ஆலோசனை தெரிவித்துள்ளார், இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:

தற்போது நிலவும் தட்பவெப்ப நிலையால் புதுக்கோட்டை மாவட்டத்தில் சாகுபடி செய்துள்ள நெற்பயிரில் ஆனைக் கொம்பன் ஈ தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனைக்கொம்பன் பூச்சியானது நெற்பயிரின் தூர்களின் குருத்து பகுதியை தாக்குவதால் பாதிக்கப்பட்ட இலையானது வெங்காய இலை போன்று மாறிவிடும். ஈ வகையை சேர்ந்த இந்த பூச்சியானது மஞ்சள் கலந்த பழுப்பு அல்லது இளஞ்சிவப்பு நிறமாகவும், கொசுவை போல் சிறியதாகவும், நீண்ட மெல்லிய கால்களுடன் இருக்கும். இதனுடைய புழுப்பருவம் பயிர்களை தாக்குவதனால் தூர்களுக்கு பதிலாக கொம்பு போன்ற கிளைப்புகள் தோன்றும். இந்த கிளைப்புகள் வெண்மையாகவோ அல்லது இளஞ்சிவப்பு நிறமாகவோ குழல் போன்று வெங்காய இலையைப் போல காணப்படும். இதை பார்ப்பதற்கு யானையின் கொம்பை போல் இருப்பதனால் இது ஆனைக் கொம்பன் என்று அழைக்கப்படுகிறது.

தாய்ப்பூச்சியானது நீளமான உருளை வடிவிலான பளப்பளப்பான முட்டைகளை இலையின் அடிப்பகுதியில் இடும். இதிலிருந்து வெளியாகும் புழுக்கள் நெற்பயிரின் குருத்துக்களை துளைத்து குழல்களாக மாற்றி விடும். இதனால் பயிரில் நெற்கதிர்கள் உருவாகாமல் விவசாயிகளுக்கு மகசூல் இழப்பு ஏற்படும். நெல் நடவு செய்த 35 முதல் 45 நாட்களில் தான் இந்த புழுக்களின் தாக்குதல் அதிகம் காணப்படும்.

எனவே, வயல்களை களைகள் இல்லாமல் தூய்மையாக வைத்திருப்பதனாலும், புற ஊதா விளக்குபொறிகளை வைத்தும், ஈக்களை கவர்ந்து அழிக்கலாம். தழைச்சத்து உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவில் பயன்படுத்தினால் இதன் தாக்குதலில் இருந்து நெற்பயிர்களை பாதுகாக்கலாம்.

மேலும், இப்பூச்சியின் தாக்குதல் பொருளாதார சேத நிலை அளவை (அதாவது 10 இலைக்கு ஒரு இலை வெங்காயத்தாள்) விட பாதிப்பு அதிகமாகும்போது மகசூல் இழப்பு ஏற்படும். இதனை கட்டுப்படுத்த பூச்சிக் கொல்லி மருந்துகளான கார்போசல்பான் 25 சத ஈ.சி - 300 மிலி அல்லது பிப்ரோனில் 5 சத எஸ்.சி - 400 மி.லி ஆகிய மருந்துகளில் ஏதேனும் ஒன்றை ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத் தெளிப்பான் கொண்டு தெளித்து கட்டுப்படுத்திடலாம். இதன் மூலம் விவசாயிகளுக்கு மகசூல் இழப்பு ஏற்படுவது தவிர்க்கப்படுகிறது. மேலும் தாக்குதல் தென்பட்டால் கூடுதல் விபரங்களுக்கு உடனடியாக அருகில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தினை அணுகிட கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் திருமதி. மு. சங்கரலட்சுமி அவர்கள் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

ஒம்/- மு. சங்கரலட்சுமி

வேளாண்மை இணை இயக்குநர்,

புதுக்கோட்டை.